**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டது. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்தல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கல்லூரி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- சபையின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு

"சிறப்பாகத் திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபையினை ஸ்தாபிக்கின்ற சந்தர்ப்பத்தில் அணுசக்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 14,044,902 தொகையான சொத்துக்களும் ரூபா 5,414,755 தொகையான பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சபைக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த தேறிய மூலதன மானியம் ரூபா 8,630,147 ஆக அந்த ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த மானியத்திற்கு எதிராக வருமானத்தை வருடாந்தம் இனங்காணல் (பெற்ற மானியத்தை காலக்கழிவு செய்தல்) மானியத்தின் மொத்த பெறுமதியை மிகைத்து மேற்கொண்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் அணுசக்தி அதிகார சபை தொடர்பான திரண்ட நிதியின் பெறுமதி ரூபா 3,821,793 தொகையான வரவு மீதியைக் கொண்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள இந்த விடயத்தை நன்றாக ஆய்வு செய்து 2021 ஆம் ஆண்டின் போது அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். | சரியான கணக்கீட்டு கொள்கை பின்பற்றப்படுதல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச் சட்டம் | | | |
| 82(1) ஆம் பிரிவு | ஒழுங்குபடுத்துதல் சபையின் அனைத்து உத்தியோகத்தர்களும் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான அனைத்து விடயங்கள் தொடர்பாக முழுமையான இரகசியத்தைப் பேணுவதற்கு சத்தியப் பிரமாணம் செய்து வெளிப்படுத்துகையில் கையொப்பமிட வேண்டிய போதிலும் ஒழுங்குபடுத்துதல் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அனைத்து நியமனக் கடிதங்களிலும் 16 ஆவது பந்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு இணங்க ஊழியர் அதில் கையொப்பமிட்டு உடன்பட்டுள்ளனர். | அதிகாரச் சட்டத்தின் 82(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 128(1)(I) | சபையின் ஐந்து உத்தியோகத்தர்கள் நிவாரண அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரத்திற்கான | அதிகார சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் தெளிவுபடுத்தலின் அடிப்படையில் | நிதிப்பிரமாணம் 128(1)(ஐ) வின் பிரகாரம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு அண்ணளவாக 01 ஆண்டிற்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்னர் முதலாவது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டிருந்தனர். | நடவடிக்கை எடுப்பேன். | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 9:1 ஆம் பந்தி | அமைச்சரவையின் முன் அங்கீகாரமின்றி நிகழ்கால பணிப்பாளர் நாயகத்திற்கு 2021 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் 71(3) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சருக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் தற்பொழுது இருக்கும் பணிப்பாளர் நாயகம் அடுத்துவரும் 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். | ஓய்வுபெற வேண்டிய வயதெல்லைக்கு அப்பால் சேவையை நீடிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | II ஆம் அத்தியாயத்தின் 15:1(ix) ஆம் பந்தி | உரிய அத்தியாயத்தின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் சபையினால் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட்டிருக் காததுடன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களுக் கு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. | வினைத்திறமை காண் தடைப் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு தாமதித்தமை சரியானதாகும். | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையினை நடாத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | | | |
| 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்த ரூபா 33,100,727 பெறுமதியான 152 சொத்து விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இதில் ரூபா 15,057,003 பெறுமதியான சொத்துக்கள் அமைச்சு நிதிஏற்பாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 18,043,724 பெறுமதியான சொத்துக்கள் அன்பளிப்பாக கிடைத்திருந்தது. | கணக்கு தணிக்கையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன எதிர்காலத்தில் ஏனைய தகவல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கொள்வனவு செய்த சொத்துக்கள் தொடர்பான சரியான தகவல்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கணக்கு தணிக்கை யாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,752,640 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,874,702 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 4,122,062 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மொத்த செலவு ரூபா 4,008,662 தொகையால் குறைவடைதல் மற்றும் மொத்த வருமானம் ரூபா 113,400 தொகையால் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகாரச் சட்டத்தின் 11(ஈ) பிரிவின் பிரகாரம் கதிர் வீச்சுக்களிலிருந்து | வரைபு கொள்கையானது பொதுமக்களின் கருத்துரைகளைப் பெற்றுக் | இக்கொள்கையை தயாரிக்கும் நடவடிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாத்தல், பதார்த்தமான மற்றும் ஏனைய கதிர்வீச்சுப் பொருட்களை அணுகுதல் மற்றும் பேணிக் காத்தல் மற்றும் கதிர்வீச்சுப் பொருட்களின் முகாமைத்துவம் சம்பந்தமான ஒரு தேசியக் கொள்கை மற்றும் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபை தோற்றுவிக்கப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்தும் அந்நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | கொள்வதற்காக சபையின் இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | விரைவுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஒழுங்குபடுத்துதல் சபையினால் அதிகாரச் சட்டத்தின் 12(ஓ) பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு பாதுகாப்புச் சேவை வழங்குனராக சபைக்கு அங்கீகாரம் வழங்கப்படாதிருந்ததுடன் அதற்காக ஒரு செயல் நடைமுறை அல்லது ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சேவைக்காக அதிகாரச் சட்டத்தின் மூலம் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | ஒழுங்குபடுத்துதல் சபையினால் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) | அதிகாரச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய அணுமூலப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபையினால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கையினால் உரிய பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே இப்பட்டியலைத் தயாரிக்கலாம். பாதுகாப்பு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆயத்தம் செய்யப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகாரச்சட்டத்தின் 86(1) ஆம் பிரிவின் பிரகாரம் | கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் அக்கறைகளுக்கான | அதிகாரச்சட்டத்தில் அதிகாரமளிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சினால் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படுகின்ற அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் கட்டளைகளைத் தயார்ப் படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் கட்டளைகள் உருவாக்குதல் வேண்டும். எனினும், அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் சபையினால் இதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைகள் தற்பொழுது வரைபாக்கப்பட்டுள்ளதுடன் அதன் இறுதி வரைபு சர்வதேச அணுசக்தி முகவராண்மையின் நிபுணரினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. | பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக கட்டளைகள் தயாரித்தல் வேண்டும். |
| (உ) | அதிகாரச்சட்டத்தின் 87(1) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பொருட்கள் மற்றும் கதிர்வீச்சு கழிவுப் பொருட்களை இலங்கை குடியரசுக்கு அதற்கு வெளியே மற்றும் அதற்கு உள்ளே எடுத்துச் செல்லுதல், அணுமைய அல்லது கதிர்வீச்சு அவசர சந்தர்ப்ப நிலைக்கு பரிகாரமளித்தல், கதிர்வீச்சு ஊழியர்களின் தகைமைகளுக்காக சரிபார்ப்புக்களைத் தயாரித்தல் முதலிய விடயங்கள் சம்பந்தமாக சபையினால் சட்ட விதிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது கதிர்வீச்சுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக சர்வதேச அணுசக்தி முகவராண்மையினால் வழங்கப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான ஒழுங்கு விதிகள் பயன்படுத்தப்படும். எதிர்காலத்தில் இந்த ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு பொருத்தமான பகுதியை மாத்திரம் பயன்படுத்தி சட்டவிதிகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சட்ட விதிகளைத் தயாரிப்பதற்கு அதிகாரம் வழங்குகின்ற அனைத்து விடயங்கள் சம்பந்தமாக சட்ட விதிகளைத் தயாரித்தல் வேண்டும். |